**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,**
**ஜெயங்கொண்டம்.**
**C.C.No. 300 /2022**

2026 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 05 ஆம் நாள் புதன் கிழமை அரசு தரப்பு சாட்சி–01, திரு.முத்துக்குமரன் என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4 ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முத்துக்குமரன் | வயது | : | 48/26 |
| த.பெ/ க.பெ. | : | தங்கவேல் | தொழில் | : | கல்லூரி தாளாளர் |
| ஊர் | : | ஜெயங்கொண்டம் | நிலை | : | LW01 / PW01 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**( எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை:**

நான் தற்போது செங்குந்தபுரத்தில் வசித்து, வருகிறேன். சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் என் வீட்டுடன் கூடிய நர்சிங் கல்லூரி வளாகத்தில் இருந்தபோது, அங்கு கும்பலாக 10, 20 நபர்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த கும்பலில் யாரோ என்னை அசிங்கமாகப் பேசி, கட்டையால் தாக்கினார்கள். யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை. எனக்கும் ஆஜர் எதிரிக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்ததாலும், அவர் அந்த கூட்டத்தில் நின்றுக்கொண்டிருந்ததாலும், அவர்தான் என்னை தாக்கியிருக்கக் கூடும் என்று நினைத்து, சந்தேகத்தின்பேரில் ஆஜர் எதிரி மீது போலீசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள

கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னிட்டு, போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் கு/வி.**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது ஊர்க்காரர் ஆவார். தற்போது அவருடன் சமாதானமாகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில், கடந்த 19.09.2022ம் தேதி இரவு 09.00 மணியளவில், என் வீட்டுடன் கூடிய நர்சிங் கல்லூரி வளாகத்தில் இருந்தபோது அங்கு வந்த எதிரி வீட்டுடன் கூடிய கல்லூரி வளாகத்தின் முன்பு நின்றுக்கொண்டு அசிங்கமாகத் திட்டிக்கொண்டு இருந்தார் என்றும், அவரை ஏன் என் கல்லூரி மற்றும் வீட்டிற்கு முன்பாக திட்டிக்கொண்டு இருக்கிறாய், இங்கு படிக்கிற மாணவிகள் இருக்கிறார்கள் என்று கேட்டதற்கு அவர் என்னை அசிங்கமாகத் திட்டினார் என்றும், அருகில் கிடந்த கட்டை கழியை எடுத்து நீ என்னிடம் ஏதாவது பேசினீன்னா இந்த கட்டை கழியாலேயே அடித்து கொன்றுவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் அப்போது அங்கு கூடியிருந்த கல்லூரி மாணவிகளை பார்த்து இங்க என்னடி வேடிக்கை பார்க்கிறீங்க என்று அசிங்கமாகத் திட்டினார் என்றும் போலீசார் விசாரணையிலும், புகார் மனுவிலும் சொல்லிவிட்டு, தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்றுள்ளதால் வழக்கு சம்பவத்தை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை**

**மறு விசாரணை – இல்லை**

உண்மை நகல் /
ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.